# ராமராஜ்ய தர்பார்.

## மந்திரி கட்சிக் கூட்டத்துக்கு போலீஸ் உதவி ஏன்?

### அதனால் எதிர்ப்பாளரே அதிகமென விளங்கவில்லையா?

### ஆங்கில பாஷை அடிமை பாஷையா?

(தோழர் ஆர். ஜி. விக்டர்)

தமிழ் சகோதர சகோதரிகளே!

கடந்த எட்டு மாதங்களாகத் தமிழ்நாட்டில் நடந்துவரும் இந்தி எதிர்ப்புப் போர் விஷயமாய் "விடுதலை"ப் பத்திரிகையில் வெளிவரும் விஷயங்களைப் படித்தும் சென்னையில் எதிர்ப்புக் கூட்டங்களில் பேசப்பட்ட விஷயங்களைக் கவனித்துக்கொண்டும் வந்திருக்கிறேன். 16-6-38ல் மாலை 6-மணிக்குச் சென்னையில் திலகர் கட்டம் என்னும் இடத்தில் இந்தியை ஆதரிக்கும்படியாகவும் மந்திரி சபையை ஆதரிக்கும்படியாகவும் முத்தரங்க முதலியாரால் கூட்டப்பட்ட கூட்டத்திலும் ஆஜராயிருந்தேன். அங்கு நடந்த காரியங்களை நேரில் கண்டவர்களில் யானும் ஒருவன். அதைப் பார்த்தபின் எனக்குண்டான விசனமும், ஆத்திரமும் என்னை இக்கடிதத்தை உங்களுக்கு "விடுதலைப்" பத்திரிகையின் மூலமாய் எழுதத் தூண்டிற்று. அன்று நடந்த விஷயங்களை 'மெயில்', பத்திரிகையானது ஐம்பது வரிக்குள் சுருக்கமாய்ப் பிரசுரம் செய்து முடித்துக் கொண்டது. மெயில் பத்திரிகையில் இரண்டொருவருக்குக் காயமென்றும் நான்கு பேர் கைது செய்யப்பட்டார்களென்றும் நமது பிரதம மந்திரியான இராஜகோபாலாச்சாரியார் பிரசங்கம் சற்று விபரமாயும் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. இப்பேர்ப்பட்ட சம்பவம் 'ஜஸ்டிஸ்'கட்சிக்காரர் ஆட்சியின் கீழ் நடந்திருக்குமானால் இதற்குள்ளாக காங்கரஸ் பத்திரிகைகளெல்லாம், கூவே கூ! இதென்ன அநியாயம்? இதென்ன மிருகத்தனம்? இப்படியும் அக்கிரமம் செய்வாருண்டா? என்றெல்லாம் சொல்லி அழுது புலம்பி ஒப்பாரி வைத்துவிட்டிருக்கும். ஆனால் தமிழ் வீரர்கள் உண்மையான ஆண்தன்மை வீரம், சுதந்தரம் உள்ளவர்களானபடியால் இப்படியெல்லாம் அழுது புலம்புவது ஆண்தன்மையல்லவென்று எண்ணித் தங்களுக்கு நேரிட்ட அடியையும் பொருட்படுத்தாமல் இருக்கிறார்கள். இதுவே மெய்யான வீரத்தன்மை.

### போலீஸ் உதவி ஏன்?

இந்தியை ஆதரிக்கக் கூட்டப்பட்ட இப் பேடிகளின் கூட்டத்தில் 500 ரிசர்வ் போலீசாரும் 75 குதிரைப் போலீசாரும் போலீஸ் கமிஷனரும், ஏராளமான இன்ஸ்பெக்டர்களும் சப் இன்ஸ்பெக்டர்களும் புடை சூழ்ந்திருந்ததற்குக் காரணமென்ன? இந்தியை எதிர்ப்போர் ஏராளமாக இருக்கிறார்கள் என்பது இதனால் திட்டமாய்த் தெரியவில்லையா? இந்தி பக்தரின் காரியம் எவ்வளவு பலஹீனமும் பயனற்றதும் என்று இதனால் திட்டமாய்த் தெரியவில்லையா? மந்திரிசபையை ஆதரிப்பதற்குக் கூட்டப்பட்ட கூட்டம் போலீஸ் உதவியினால் தானா கூட்டப்பட வேண்டும்?

மேலும் பிரதம மந்திரியார் அக்கூட்டத்தில் பேசும்போது "நான் இந்த மாகாணத்தின் அரசியல் நடத்தும் வரைக்கும், எனக்குப் பூரண நம்பிக்கையும் விசுவாசமும் உள்ள காரியத்தை செய்யாமலிருக்க முடியாது" என்று சொன்னார். இவர் தவறுதலில்லாத தெய்வத் தன்மை உள்ளவரா? ஆனால் தமிழராகிய நாம் என்ன சொல்லுகிறோம் என்றால் "எங்களுக்கு மட்டுமல்ல, எங்களுடைய பின் சந்ததியாருக்குக் கெடுதி விளைவிக்கப் போகிறதென்று நாங்கள் பூரண நம்பிக்கை கொண்டிருக்கும் ஒரு காரியத்தைத் தடுக்காமலிருக்க முடியாது" என்று சொல்லுகிறோம். தான் சரி என்று நினைக்கிற ஒரு காரியத்திற்கு எல்லாரும் ஆமா சாமி போட வேண்டும், இல்லாவிட்டால் போலீஸ் படையைக் கொண்டு தடியடி கொடுக்கவும், குதிரைகளின் காலால் மிதிக்கவும் செய்வேன் என்பது பிரதம மந்திரியின் அஹிம்சா சேவா? பிரிட்டிஷார் அரசாட்சி எவ்வளவோ சிறந்ததென்றும் மேன்மையானது என்றும் நம்முடைய பிரதம மந்திரி தெளிவாய்க் காட்டி விட்டார்.

### வடநாட்டில் வேலை கிடைக்குமா?

இந்தி படித்தால் வடநாட்டில் வேலை கிடைக்குமாம். வேலை இல்லை என்று ஒரு பெண் தன் சிறிய தாயாருடைய வீட்டிற்குப் போனாளாம். ஆனால் சிறிய தாயார் ஈச்சம்பாயைக் கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம். தென்னாட்டார் வடநாட்டிற்குப் போனால் இதே கதிதான் நேரிடும்.

"இந்தி இல்லாவல் தாராளப் படிப்பு உண்டாகாது என்று பிரதம மந்திரி கூறுகிறார். இந்தியில் என்ன தாராளப் படிப்பு உண்டு என்று அவர் விளக்கவேயில்லை. ஆனால் இங்கிலீஷ் பாஷையும் தாய்பாஷையும் தாராளப்படிப்பிற்குப் போதுமென்று நாம் அனுபோகத்தில் கண்டிருக்கிறோம். தவிர பிராமணரல்லாத மக்கள் 93% இன்னும் தாய்பாஷையைத் தெரியாமலிருக்கும்போது இந்தக் கட்டாய இந்தி படிப்பிற்காகச் செய்யும் செலவு அனாவசியமென்று நாம் சொன்னால் அதைத் தாராள மனதுடைய எந்த மந்திரியும் ஒப்புக்கொள்ள வேண்டியது கடமை. ஆனால் "தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்று சொல்வதும் மற்றும் போலி ஞாயங்களைச் சொல்லி மக்களை ஏமாற்றப் பார்ப்பதும் மூடத்தனமான செயலேயன்றி வேறில்லை.

### தமிழில் கற்பிக்கப்படுவதின் யோக்கியதை

மேல் பாரங்களில் இனிமேல் எல்லாப் பாடங்களும் தமிழிலேயே கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதால் தமிழ்பாஷை விருத்தியாகும் என்று மந்திரிமார் மழுப்பப் பார்க்கிறார்கள். இதையும் சற்று ஆராய்ந்துபார்ப்போம். கணிதம் விஞ்ஞான சாஸ்திரம் முதலிய பாடங்களில் வரும் விசேஷ பதங்கள் எவ்வாறு தமிழில் எழுதப்படும்? முதல் மூன்று பாரங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கணித புஸ்தகங்களைப் பார்த்தால் பகுதி--தொகுதி என்ற இலேசான தமிழ் பதங்கள் முறையே 'ஹரம்' 'அம்சம்' என்றும், ஆயிரத்தில் ஒன்று பத்தாயிரத்தில் ஒன்று என்றும பதங்கள் முறையே 'ஸஹஸ்ராம்சம்' என்றும் தஸஸஹஸ்ராம்சம்' என்றும் எழுதப்பட்டுள்ளன.

தவிர விஞ்ஞான சாஸ்திரப் புஸ்தகத்தில் 'Manganese-di-oxide' என்னும் பதம் 'த்விப்ராண யுதி' என்றும் Zinc chloride என்னும் பதம் 'நாக ஹரிதக யுதி' என்றும் எழுதப்பட்டுள்ளன. இப்பதங்கள் பிராமணரல்லாத மக்களின் வாயில் நுழையுமா? கீழ் வகுப்பிலே இப்படியிருக்குமானால் உயர்தர வகுப்பில்கேட்கவும் வேண்டுமா? இப்பதங்களைப் படிப்பதால் மாணவரின் இங்கிலிஷ் அறிவும் குன்றி, நாளடைவில் தமிழ் பாஷையும் கலப்பிடமாகிச் செத்துப்போய், செத்துப்போன ஓர் பாஷை உயிர்த்தெழும்பும் என்பதற்குச் சந்தேகமென்ன?

போதனாமுறை பாடசாலைகளில் சேர்ந்தும் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேறிய மாணவர் எந்த பாஷையில் அப்பாடங்களைப் படிப்பது?

### ஆங்கிலப் பாஷையின் உயர்வு

மிருகங்களிலும் கேவலமாக மதிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களில் அநேகர் இப்போது மேம்பாடடைந்தது, பிரிட்டிஷ் ஆட்சியினாலும், ஆங்கிலேயப் படிப்பினாலும்தான். காருண்ய காங்கரஸ் கவர்ன்மெண்டார் அதின் வாயிலும் மண் போட ஆரம்பித்துவிட்டார்கள். ஆங்கிலேய பாஷை ஏறக்குறைய உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. வியாபார விருத்திக்கு இப்பாஷைமிகவும் இன்றியமையாதது. எல்லா நாடுகளுக்கும் இப்பாஷையின்மூலமாய்கடிதப்போக்கு வைத்துக் கொள்ளலாம். இந்தியில் எழுதினால் அந்நாடுகளில் உள்ள குப்பைத் தொட்டிகளில் தான் குந்திக்கொண்டிருக்கும். ஜப்பான் தேசத்திற்கு அனுப்பினால் பையன்கள் அவைகளைக் கொண்டு காற்றாடி பறக்க விடுவார்கள்.

இங்கிலீஷ்காரர் நமது தேசத்தில் இருப்பதால் எத்தனையோ ஆதிதிராவிட மக்களுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் பிழைப்பு நடந்து வருகிறது. ஒவ்வொரு வெள்ளைக்காரன் வீட்டிலும் நாலைந்து வேலைக்காரருக்குக் குறைவில்லாமல் வேலை செய்கிறார்களே. ஒவ்வொரு வேலைக்காரனுக்கும் சராசரி இருபது இருபத்தைந்து ரூபாய்க்குக் குறையாமல் மாத சம்பளம் கிடைக்கிறதே. வெள்ளைக்காரன் தன் வீட்டில் வேலை செய்கிற ஒவ்வொரு வேலைக்காரனையும் நன்றாய் அலங்கரித்து சிங்காரித்து உடுத்துவித்து எவ்வளவோ அலங்காரமாக வைத்திருக்கிறானே.

ஆங்கில பாஷை அடிமை பாஷையாம்.

அப்படியானால் காங்கரஸ் மந்திரிகளும், தலைவர்களும் ஏன் தங்களுடைய பிள்ளைகளை ஏராளமான பணச் செலவு செய்து இங்கிலாந்திற்கு அனுப்பவேண்டும்? உடனே அவர்களுக்கு தந்தி கொடுத்து ஆகாய கப்பல் மார்க்கமாக இந்தியாவிற்கு வரச்சொல்லி இந்தியை கற்கச்சொல்லக்கூடாதா? ஆங்கில பாஷையினாலே மக்கள் சுயாதீனப் பிரியாயும் பரந்த நோக்கமும், விசால புத்தி உடையவர்களுமானார்கள். நீதி நியாயத்திற்குக் கட்டுப்படுகிறவன் ஆங்கிலேயன் ஒருவனே. நான் பிரிட்டிஷாருக்காக வக்காலத்துப் பிடிக்கவில்லை. அவன் குறைவுள்ளவன் தான்.

ஆனாலும் மொத்தத்தில் அவனைப்போல் தயாள சிந்தையும் நன்மை செய்யும் சுபாவமும் நமது தேசத்தில் உள்ள பார்ப்பனர்களுக்குக் கிடையாது. தேசீயம் என்னும் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு எங்கள் முன்னே வருகிறார்கள். உள்ளே அவர்கள் தந்திரமுள்ள நரிகளாயும், பட்சிக்கிற ஓநாய்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறதை நம்பாதேயுங்கள். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்களோ அதை நீங்களும செய்யுங்கள். "பார்ப்பனியம்" என்னும் விஷப்பாம்பின் வாயிலிருந்து நீங்கள் தப்ப வேண்டுமென்றால் 'பிரிட்டிஷ்' அரசாட்சி என்னும் பாம்பாட்டியை உங்களுக்குத் துணைவனாக வைத்துக்கொள்ளுங்கள்.

### மஞ்சள் பெட்டி மகத்துவம்.

மஞ்சள் பெட்டி, மஞ்சள் பெட்டி யென்று மதிமயங்கி உங்கள் ஓட்டுகளைப் போட்ட திராவிட மக்களே! உங்களை இப்போது 'மஞ்சள் காமாலை' என்னும் வியாதி பிடித்திருக்கிறது. எல்லாம் மஞ்சளாகவே தெரிகிறது. அதிலிருந்து சீக்கிரம் சுகமடைவீர்களாக.

இப்படிக்கு
ஆர். ஜி. விக்டர்.

---

## மட்டாஞ்சேரிக்கு குடி தண்ணீர் சப்ளை.

### திவான் சர். ஷண்முகம் திறந்து வைத்தார்.

எர்ணாகுளம், ஜூன். 26-

உலகத்திலே ஜன நெருக்கங் கொண்ட மட்டாஞ்சேரி நகரம் பல வருடங்களாக குடி தண்ணீர் வசதியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. அக்குறை இப்பொழுது மறைந்து விட்டது. எர்ணாகுளத்திலிருந்து குழாய் மூலமாக குடி தண்ணீர் கொண்டுவர பைப்பலயன்கட்டப்பட்டு விட்டது. இதை நேற்று கொச்சி திவான் சர். ஆர். கெ. ஷண்முகம் செட்டியாரவர்கள் திறந்து வைத்தார். அது சமயம ஏராளமான உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதாரும் விஜயம் செய்திருந்தனர்.

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

லையில் கைத்தறித்துணிகளுக்கு இடம் வேண்டும், இல்லையேல் அந்த காட்சிசாலைக்கு அதன் நிருவாகிகள் ஆயிரம் ஆயிரமாக வாடகை கொடுத்தாலும் முனிசிபல் மைதானத்தை கொடுக்கக் கூடாது என்று பலமான கிளர்ச்சி இருந்து வருவது தெரிந்தும், இந்த காங்கரஸ் கவுன்சிலர்கள் இப்படி அவசரமாக ஒழுங்கற்ற முறையில் இந்த விஷயத்தைப் பைசல் செய்ததாகக் கூறப்படுவது வெறுக்கத்தக்கதே ஆகும். அதுவும் இலவசமாக கொடுத்திருப்பது பொது ஜனங்களுக்கு இருந்து வரும் ஆத்திரத்தை மேலும் மூட்டுவதாக இருக்கின்றது. இந்த ஒழுங்கற்ற தீர்மானத்தை ரத்து செய்ய முனிசிபல் சபையின் விசேஷக்கூட்டம் ஜூலை 7ந்தேதி நடைபெற ஏற்பாடு செய்யப்படுகிறதாம். அன்றாவது காங்கரஸ்கட்சி கவுன்சிலர்கள் சுயேச்சைக்கட்சி கவுன்சிலர்களுடன் ஒத்துழைத்து, பொதுஜனங்களின் விருப்பத்தை மதித்து, தாங்கள் செய்த தவறை உணர்ந்து, நேர்மையாக நடந்துகொள்ளுகிறார்களா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.